செ.வெ.எண்: 23 நாள்: 10.08.2019

**கரூர் மாவட்டம்**

**100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்குபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தொடங்கிவைத்து தேர்வு செய்யப்பட்ட 981 நபர்களுக்கு பணி நியமண உத்தரவுகளை வழங்கினார்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட வேலைவாய்ப்புத்துறையின் சார்பில், எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியின் ஒத்துழைப்போடு நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப் முகாமை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் இன்று (10.08.2019) தொடங்கிவைத்து தேர்வான நபர்களுக்கு பணி நியமண உத்தரவுகளை வழங்கினார்

இக்கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் உலக முதலீட்டாலர்கள் மாநாட்டை கூட்டி அதன் மூலம் பல ஆயிரம் கோடி முதலீட்டை திரட்டி பல ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலவர் எடப்பாடி திரு.கே.பழனிசாமி அவர்கள் சென்னையில் ஜனவரி 2019 ஆண்டு 23 மற்றும் 24 தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்திஅதன் மூலம் ரூ. 3 இலட்சத்து 431 ஆயிரம் கோடி முதவீட்டை திரட்டி 10.50 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளார்கள்.

நமது கரூர் மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கும் அவர்களின் கல்வித்தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, தொழில்நெறி வழிகாட்டி மையம் மற்றும் எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரி இணைந்து கரூர் மாவட்டத்தைச்சேர்ந்த வேலை நாடுநர்களுக்கு உதவும் வகையில் 100க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்துகொள்ளும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை நடத்தியுள்ளார்கள்.

இம்முகாமில், 8ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்கள், தொழில்நுட்பப்பிரிவில் படித்தவர்கள், வணிக பட்டதாரிகள், செவிலியர் படிப்பு படித்துள்ள வேலைவாய்ப்பற்ற நபர்கள் கலந்துகொண்டுள்ளனர். தமிழகத்தின் பல்வேறு முன்னனி தனியார் நிறுவனங்கள் இந்த முகாமில் கலந்துகொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வுசெய்துள்ளது மிகவும் மகிழ்ச்சியான செயலாகும். மேலும் திறன்மேம்பாட்டு கழகத்தால் நடத்தப்படும் பல்வேறு இலவச பயிற்சிக்கான பதிவும் இம்முாகமில் நடைபெறவுள்ளது. இம்முகாமில் கலந்துகொள்ள எவ்வித கட்டணமும் இல்லை. முற்றிலும் இலவசமானது.

இத்தகைய சிறப்புமிகுந்த, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித்தரும் இத்தகைய முகாமினை சிறப்பாக நடத்த அனைத்து துறை அலுவலர்களும் தங்களது முழு ஒத்துழைப்பை அளித்துள்ளனர். மாற்றுத்திறனாளிகள் அதிக அளவில் முகாமில் கலந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டது. அவ்வாறு வருகைதந்த மாற்றுத்திறனாளிகள் எந்தவித சிரமமும் இன்றி சென்று வரும் வகையில் சக்கர நாற்காளிகளுடன் தன்னார்வலர்களை பணியமர்த்தப்பட்டு அவர்களுக்கென்று சிறப்பு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற வேலைவாய்ப் முகாமில் கலந்துகொண் 2025 நபர்களில், பல்வேறு பணிகளுக்காக தேர்வுசெய்ப்பட்ட 904 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அயல்நாட்டு வேலைகளுக்காக முதல்கட்ட தேர்வில் 47 தேர்வாகியுள்ளனர். 30 மாற்றுத்திறனாளிகளும் பல்வேறு பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இன்றைய வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமண உத்தரவுகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.விஜயா, எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரி தாளாளர் திரு.இராமகிருஷ்ணன், மாவட்ட மாற்றுத்திறானிகள் நல அலவலர் திருமதி.ஜான்சி, உள்ளிட்ட அனைத்துத்துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**